செ.வெ.எண்.04 நாள் : 03.01.2017

# அரியலூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.3 கோடியே 91 இலட்சத்து 14 ஆயிரம் மதிப்பில் 4,671 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் இந்த திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உழவர் பாதுகாப்பு திட்டம் தொடர்பாக விளம்பரம் செய்யப்பட்டும், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்திலும் இந்த திட்டம் பற்றி விரிவாக விளக்கம் அளிப்பதாலும், இந்த திட்டத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்களின் பட்டியலை ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும் வைக்கப்பட்டதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் பயனடைவோர் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது.

முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கடந்த **ஐந்து ஆண்டு** காலத்தில் **ரூ.23 கோடியே 64 இலட்சத்து 75 ஆயிரம்** மதிப்பில் 45,877 பயனாளிகள் பயன்பெற்றனர்.

மேலும், அதுபோன்று முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திடடத்தின் கீழ் நடப்பாண்டில் (2016-17) குடும்ப உறுப்பினர்களுக்கான திருமண உதவித்தொகை 75 பயனாளிகளுக்கு ரூ.6.54 இலட்சமும், உறுப்பினர் சார்ந்தவர்களுக்கான திருமண உதவித்தொகை 1,144 பயனாளிகளுக்கு ரூ.98 இலட்சமும், தொழிற்கல்வி, கலை மற்றும் அறிவியல் பட்டய கல்வி, பொறியியல் ஆகியவற்றை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது கல்விக்கு ஏற்ப ரூ.1,250/- இருந்து ரூ.6,750/- வரை கல்வி உதவித்தொகை 1,647 மாணவ, மாணவிகளுக்கு ரூ.42.91 இலட்சமும், விபத்தில் இறந்து போன 54 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.55.32 இலட்சமும், இயற்கை மரணம் அடைந்த 1,188 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.145.37 இலட்சமும் மற்றும் புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு, எச்.ஐ.வி, காசநோய் மற்றும் இருதயநோய்களால் பாதிக்கப்பட்ட 509 நபர்களுக்கு மாதம் ரூ.1000-மும், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டு இறந்துபோன பெற்றோர்களது ஆதரவற்ற 52 குழந்தைகளுக்கு மாதம் ரூ.1000 வீதம் ஆகமொத்தம் **ரூ.391.14 இலட்சம்** 4,671 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.